இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

கல்விமாணி சிறப்பு நிகழ்ச்சித்திட்டம் (நாடகமும் அரங்கியலும் &இயற்கை விஞ்ஞானம்) - 2023/2024

இறுதிப்பரீட்சை மட்டம் - 05

**STU5512–கல்வியின் அடிப்படைகள்**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 16.12.2024 நேரம்: பி.ப. 01.30 - பி.ப 04.30

பகுதி I இல் சகல வினாக்களுக்கும் அத்துடன் பகுதி II இலிருந்து ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை எழுதுக.

## பகுதி I

1. கல்வியின் மூன்று (03) செயற்பாடுகளை தனிமனிதர்களின் கண்ணோட்டத்திற்கமைவாக விளக்குக.
2. மொன்டிசூரி கல்வியின் **ஐந்து** (05) சிறப்பம்சங்களைக் குறிப்பிடுக.
3. "மனப்பாங்குகள்" என்றால் என்ன? என்பதனைச் சுருக்கமாக விளக்குக.
4. "சமூகப் பெயர்ச்சி" என்ற எண்ணக்கருவினை பொருத்தமான உதாரணமொன்றின் துணையுடன் விளக்குக.
5. "வளர்ந்தோர் கல்வி" ஏன் சமூகத்திற்கு இன்றியமையாதது என்பதற்கு **ஐந்து** (05) காரணங்களைக் குறிப்பிடுக.
6. முறைசாரா கல்வி மற்றும் முறையில் கல்வி ஆகியவற்றுக்கிடையிலான **நான்கு** (04) வேறுபாடுகளைச் சுருக்கமாக விளக்குக.
7. திறந்த மற்றும் தொலைக்கல்வியினை இலங்கையில் நடைமுறைப்படுத்தும் போது எதிர்நோக்கும் **ஐந்து** (05) சவால்களைக் குறிப்பிடுக.
8. "இலங்கைப் பாடசாலைக் கல்வி முறையில் முக்கிய பிரச்சினைகளில் ஒன்று போட்டித் தன்மையாகும்." இப்பிரச்சினையை இழிவளவாக்குவதற்கு **ஐந்து** (05) பரிந்துரைகளை முன்வைக்குக.

**(05 x 08 = 40 புள்ளிகள்)**

## பகுதி – II

9. i. பாம்ரிங்கினால் (Baum ring) அடையாளப்படுத்தப்பட்ட குழந்தை வளர்ப்பு பாங்குகள் **மூன்றினைப்** (03) பெயரிடுக.

**(03 புள்ளிகள்)**

ii. "பிள்ளைகளின் சமூகமயமாக்கல் செயற்பாட்டில் குடும்பம் பிரதான பங்கினை வகிக்கின்றது." இக்கூற்றுடன் உடன்படுகின்றீர்களா? **நான்கு** (04) காரணங்களை முன்வைக்குக.

**(08 புள்ளிகள்)**

iii. பாடசாலை மாணவர்களின் சமூகமயமாக்கலை மேம்படுத்த ஓர் ஆசிரியர் மேற்கொள்ளக் கூடிய **மூன்று** (03) படிகளை மதிப்பீடு செய்க.

**(09 புள்ளிகள்)**

10. i. மகாத்மா காந்தியினால் அறிமுகப்படுத்தப்பட்ட "நைதலிம்" இன் **மூன்று** (03) கொள்கைகளைக் குறிப்பிடுக.

**(03 புள்ளிகள்)**

ii. மகாத்மா காந்தியினால் முன்மொழியப்பட்ட "கைவினையை மையமாகக் கொண்ட கல்வியின் (Craft – Centered Education) **நான்கு** (04) நேர்மறையான தாக்கங்களை கலந்துரையாடுக.

**(08 புள்ளிகள்)**

iii. உடலின் மூன்று அம்சங்களான (தலை, கை, மனம்) குழந்தையின் இணக்கமான (Harmonious) விருத்தியைக் கொண்டு வருவதற்கு கல்வி வழங்கப்படல் வேண்டும் என்று காந்தி வலியுறுத்தினார். கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் (நாடகம் மற்றும் அரங்கியல்/ விஞ்ஞான) பாடங்களில் பயன்படுத்தக்கூடிய **மூன்று (03)** கற்பித்தல் முறைகளைக் குறிப்பிட்டு, அவற்றில் ஒன்றினை மனவெழுச்சிசார் ஆட்சியினை (மனப்பாங்கு) விருத்தி செய்வதற்காக பயன்படும் விதத்தினைச் சுருக்கமாக விளக்குக.

**(09 புள்ளிகள்)**

**11. i.** "சமூக அடுக்கமைவு" என்றால் என்ன என்பதைச் சுருக்கமாக விளக்குக.

**(04 புள்ளிகள்)**

ii. "இலங்கையின் கல்வியானது மாணவர்களுக்கு சமூகப்பெயர்ச்சியினை அடைவதற்கு உதவுகின்றது" இக் கூற்றுடன் உடன்படுகின்றீர்களா? **நான்கு** (04) காரணங்களின் துணையுடன் விளக்குக.

**(08 புள்ளிகள்)**

iii. தாழ்த்தப்பட்ட சமூகப் பொருளாதாரப் பின்னணியில் உள்ள குழந்தைகள் எதிர்கொள்ளும் **மூன்று** (03) கல்விப் பிரச்சினைகளைக் குறிப்பிட்டு, அப்பிரச்சினைகளை குறைப்பதற்கு பாடசாலை மட்டத்தில் மேற்கொள்ளக் கூடிய **மூன்று** (03) நடவடிக்கைகளை பரிந்துரைக்குக.

**(08 புள்ளிகள்)**

**12. i.** கல்வி நோக்கங்கள் மற்றும் கல்விக் குறிக்கோள்கள் ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடுகளை விளக்குக

**(04 புள்ளிகள்)**

ii. ஒரு நாட்டின் கல்வி முறையில் கல்வி நோக்கங்கள் மற்றும் கல்விக் குறிக்கோள்கள் காணப்பட வேண்டியதற்கான **மூன்று** (03) காரணங்களை விளக்குக.

**(08 புள்ளிகள்)**

iii. இலங்கையின் தற்போதைய கல்விக்கு உகந்த **இரண்டு** (02) கல்வி நோக்கங்களைக் குறிப்பிட்டு, அக்கல்வி நோக்கங்களைத் தெரிவு செய்ததற்கான காரணங்களைக் குறிப்பிடுக.

**(08 புள்ளிகள்)**

**13. i.** முறைசாரா கல்வி என்றால் என்ன என்பதைச் சுருக்கமாக விளக்குக.

**(04 புள்ளிகள்)**

ii. "தனிமனிதர்களின் சமூகத்திறன்களை விருத்தி செய்வதற்கு, முறையில் கல்வி இன்றியமையாததாகும்" **இரண்டு** (02) காரணங்களுடன் விளக்குக.

**(08 புள்ளிகள்)**

iii. மாணவர்கள் வாழ்நாள் முழுவதும் கற்பவர்களாக மாறுவதற்கு நீர் ஒரு ஆசிரியராக பயன்படுத்தக்கூடிய **நான்கு** (04) உத்திகளைக் குறிப்பிட்டு, அவற்றில் **ஒன்றினைச்** (01) சுருக்கமாக விளக்குக.

**(08 புள்ளிகள்)**

*- முழுப்பதிப்புரிமை பெற்றது -*